1989 மே 4]

அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். நம்முடைய அரசு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, இந்த அணைக் கட்டுகின்ற திட்டங்களாலே உணவு உற்பத்தி எந்த அளவுக்கு அதிகமாக இருக்கும் என்பதை எடுத்துச் சொல்லி விரைவாக வனத்துறையினுடைய உத்தரவை பெற்று அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே' இப்படிப்பட்ட அணைகளைக் கட்டுவதற்கு ஒரு பெரிய தலைவலியாக இருப்பது இப்போது மைய அரசு போட்டிருக்கிற சட்டந்தான். வனத் துறை பகுதியிலிருந்து நாம் 50 ஏக்கர் நிலம் அணை கட்டுவதற்காக எடுக்க வேண்டுமென்றால், அதற்காக 100 ஏக்கர் ரெவின்யூ லேண்ட்டை திருப்பி வனத் துறைக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதையும் கொடுப்பதாக ஒத்துக்கொண்டால், அடுத்து அவர்கள் கிளப்புகிற கேள்வி, சரளைக்கல் நிலமாக இருக்கிறது, ஓடைப் புறம் போக்காக இருக்கிறது. இது தேவையில்லை என்று சொல்வி நன்னிலம் பகுதியில் நஞ்சை நிலமாகக் கொடுங்கள் என்று கேட்பார்கள் போல இருக்கிறது. அதையும் ஒத்துக்கொண்டு செய்தால், இப்போது ஒரு புதிய ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். டெபாசிட் கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமைகளை எல்லாம் பார்த்துக்கொண்டே போனால் தமிழ்நாட்டிலே எந்த அணையையும் கட்ட முடியாத சூழ்நிலை உருவாகும். இதை மத்திய அரசுக்கு இந்த அரசு விவரித்து கடிதம் எழுதியிருக்கிறது. எழுதும், மீண்டும் வாய்ப்பு கிடைக்கும்போது நேரிலும் இது குறித்து வாதாடும். இத்தகைய தடைகளை அகற்றினால்தான் பாசனத்திற்காகக் கட்டப்படும் அணைகளை விரைந்து கட்ட முடியும்.

மலைவாழ் மக்களுக்கு சலுகைகள்.

204—(*வினா எண். 454) திரு. எம். சீரங்கன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மலைவாழ் மக்களுக்கு உள்ள சலுகைகள் மேட்டூர் வட்டபால மலையில் வாழும் மலைவாழ் மக்களுக்கும் நீட்டிக்கப்படுமா?

[1989 மே 4

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எம். சிரங்கன் : பேரவைத் தலைவரவர்களே, மலைவாழ் மக்களுக்கு என்ன சலுகைகள் செய்யப்பட்டிருக் கின்றன, அங்கே எவ்வளவு மக்கள் வாழ்கிறார்கள் என்பதை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவரவர்களே, பழங்குடியினர் தொடர்ந்தாற்போல் வசிக்கும் பகுதிகளில் மொத்த மக்கள் தொகை 10,000-க்கும் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் 50 விழுக்காடுக்கும் அதிக மாக பழங்குடியினர் வசித்தால் அந்தப் பகுதி வாழ் மக் களுக்குப் பழங்குடியினர் மேம்பாட்டு துணை திட்டப் பகுதி யாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதி வாழ் மக்களு ளுடைய நல் வாழ்விற்காக பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறதென்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. எம். சிரங்கன் : பேரவைத் தலைவரவர்களே, பாலமலையில் 21 சிற்றூர்களும், 10 ஆயிரத்திற்கும் மேற் பட்ட மக்களும் வாழ்கிறார்கள். அங்கே ஒரு பஞ்சாயத்து இருக்கிறது. அங்கே குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடை யாது. அங்கே 3 ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளுக்குக் கூரையே கிடையாது. ஆசிரியர்கள் நியமிக் கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஆசிரியர்கள் அங்கே போவ தென்பது மிக மிகக் குறைவு. காரணம், போக்குவரத்து வசதியில்லாமல் மலைப் பாதையில் மேலே ஏறிப் போக வேண்டியதாக உள்ளதால், அப்படிப்பட்ட நிலையை அரசு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதோடு, அந்த மலைக்குப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்திக் கொடுக்க விரைவில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவரவர்களே, இது தொடர்பாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களிடமிருந்து சில கூடுதல்

1989 மே 4]

விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. அவை கிடைக்கப்பெற்றவுடன் மத்திய அரசின் ஒப்புதல் பெற வேண்டும். அவ்வாறு ஒப்புதல் பெறப்பட்டால் சேலம் மாவட்டம், பாலமலைப் பகுதியில் பழங் குடி மக்கள் மேம்பாட்டு துணைத் திட்டப் பகுதியாக அறிவிக்கப் படுமென்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்தப் பாலமலைப் பகுதி பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் துணைத் திட்டப் பகுதியாக இல்லாவிட்டாலும் அப்பகுதியில் வாழும் பழங்குடியினருக்கு உரிய வசதிகள் தற்போது செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, குறைகள் ஏதாவது இருந்தால் அது பற்றி விவரமறிந்து, அதற்குண்டான முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.10)

மாநில ஆதி திராவிடர் நலக் கமிட்டி.

205—(*வினா எண். 1413) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த பல ஆண்டு காலமாக மாநில ஆதி திராவிடர் லக் கமிட்டி அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் கமிட்டி அமைப்பதற்கான நட வடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர் களே,

(அ) ஆம.

(ஆ) மாநில அளவிலான ஆதிதிராவிடர் நலக்குழு அமைப் பதற்கான ஆயத்த நடவடிக்கைகள் அரசால் மேற்கோள்ளப்பட் டுள்ளன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பல ஆண்டுகளாக இந்தக் கமிட்டி அமைக்கப்படவில்லை. இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவடைவதற்குள்ளாகவாவது இந்த கமிட்டி அமைக்கப்படுமா? இதற்கு முந்தைய கேள்வியின்போதே நான் கையைத் ... தூக்கிக் கொண்டே இருக்கும்போது மாண்புமிகு தலைவர் அவர்கள் ......

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS